■ ஓவியம்: மகேஸ்

சிறுகதை



# முருகேசன் காதலித்த கதை



ஞாநி

இந்தக் கதை ஆரம்பிக்கும்போது முருகேசனுக்கு வயது 15. இது முருகேசனின் காதல் கதை. முதலில் முருகேசன் என்று சொல்வதை விட்டுவிடுவோம். அவன் ஸ்டைலாக பெயரை முருகேஷ் என்று மாற்றிக் கொண்டு 67 நாள் 30 மணி நேரம் 25 நொடிகள் ஆகிவிட்டன.



முருகேசன் **67** நாள் **30** மணி நேரம் **25** நொடிகள் முன்னால் பெயர் மாற்றிக் கொண்டபோதுதான் ஜெனிஃபரை சந்தித்திருந்தான். அந்தச் சந்திப்பினால்தான் அவன் பெயர் மாறியது. துாய மரியாள் உயர்நிலைப் பள்ளியின் பத்தாம் வகுப்பு பி செக்ஷனின் முதல் வரிசை பெஞ்ச் அருகே அந்தச் சந்திப்பு நடந்தது.

அன்றுதான் அவள் அந்த வகுப்பில் புதிதாகச் சேர்ந்திருந்தாள். முருகேசன் பத்து வருடமாக அதே பள்ளியில் படித்து... இல்லை படிக்க முயற்சி செய்துகொண்டிருந்தவன். இடைவேளை பெல் அடித்ததும் முதல் வரிசையில் இருந்த ஜெனிஃபர் இரு வரிசைகளுக்கு இடையே இருந்த நடைவெளியில் வெளியேற முயற்சிக்கையில் இரண்டாம் வரிசையில் அவளுக்குப் பின்னால் இருந்த முருகேசன் (இன்னும் முருகேஷ் ஆகவில்லை ) அவளுக்குப் பத்து நொடி முன்னதாகப் புறப்பட்டு வழியை அடைத்திருந்தான். அவளும் முன்னேறினால் முருகேசனை இடித்தே தீரவேண்டியிருக்கும் என்பதால் சட்டென பின்வாங்கி டெஸ்க்குக்குள் போனாள். முருகேசனைப் பார்த்து புன்னகைத்தபடி, "உன் பெயர் என்ன ? ” என்றாள். அப்போதுதான் அவன் முருகேஷ் ஆனான். அவள் சிரித்துக் கொண்டே வெளியேறினாள். ஜெனிஃபர் நல்ல சிவப்பு, முருகேஷ் நல்ல கறுப்பு. இதைவிட பொருத்தம் வேறு என்ன இருக்க முடியும். கறுப்புப் பெண்களுக்கு சிவப்புப் பையன்களையும் சிவப்புப் பெண்களுக்கு கறுப்புப் பையன்களையும்தான் பிடிக்கும் என்று, உதய் பல முறை சினிமா எடுத்துக் காட்டுகளுடன் விளக்கியிருக்கிறான்.

முருகேஷ் தன் வழக்கமான கன்சல்டண்ட் உதயிடம் இது பற்றிப் பேச விரும்பவில்லை. உதய்க்கு தன் மீது கொஞ்சம் பொறாமை இருக்கிறது. அதனால் சில சமயத்தில் வேண்டுமென்றே தப்புத்தப்பாக அட்வைஸ் செய்துவிடுகிறான் என்ற சந்தேகம் சமீபமாக வர ஆரம்பித்திருந்தது. ஒரு மொக்கை படத்துக்கு பிளாக்கில் டிக்கட் வாங்கவைத்து கவிழ்த்துவிட்டான்.

சரவணனிடம்தான் பேசவேண்டும். ஆனால் சரவணன் கொஞ்சம் ஓவராக சீன் போடுவான். 'ஒரு விஷயம்டா ப்ரோ.' என்று ஆரம்பித்ததுமே "சரவணன் இருக்க பயமேன்? சொல்லு ப்ரோ” என்பான். இந்த ஆரம்ப சீனையெல்லாம் சகித்துக் கொண்டு முருகேஷ் ஜெனிஃபர் தன் பெயர் கேட்ட செய்தியைச் சொன்னதும், சரவணன் “பாசிட்டிவ் சிக்னல் " என்றான். அதைக் கொண்டாட இருவருமாக 'களவாணி' படத்துக்கு ஆறாவது தடவையாகப் போனார்கள்.

அடுத்து ஜெனிஃபர் தினமும் எந்தப் பாதையில் பள்ளிக் கூடத்துக்கு வருகிறாள் என்று பார்த்தான். டவுனில் இருக்கும் பள்ளிக்கு இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள அவள் ஊருக்குப் போகும் மண் ரோட்டில் நடுவில் பிரியும் கிளைப்பாதையில்தான் இவன் ஊருக்குப் போக வேண்டும். அந்த கிளையருகே நிழல் தரும் பெரிய ஆலமரமும் சுமைதாங்கியும் இருந்தன. சுமைதாங்கி மீது ஸ்கூல்பையை வைத்துவிட்டு ஆலமரத்தடியில் சைக்கிளை நின்று பிடித்தபடி காத்திருந்தான். அவள் வருவதற்கு அரை மணி நேரம் முன்பே வந்துவிட்டான். அவள் வந்தாள். சைக்கிளின் குறுக்கே பாய்ந்தான். சட்டென பிரேக் போட்டு பேலன்ஸ் தவறி அவளும் சைக்கிளும் கீழே விழ, இதுதான் சிறந்த தருணம் என்று பாய்ந்து அவளைப் பிடித்து

தூக்கிவிட முருகேஷ் முயற்சிப்பதற்கு முன்னாலேயே அவள் ஸ்பிரிங் மாதிரி எழுந்துவிட்டாள். முருகேஷ் தூக்க முடிந்தது அவள் சைக்கிளைத்தான். வளைந்த ஹேண்டில்பாரை சரி செய்தபடி அவளிடம் தைரியமாகச் சொன்னான். - "ஐ லவ் யூ சொல்லு. இல்லாட்டா சைக்கிளை தரமாட்டேன். "

அவள் வெட்கமாகச் சிரித்தாள். "அதெல்லாம் சொல்லியா தெரியணும், லூசு.." என்றாள்.

முருகேஷுக்கு சட்டென்று புரியவில்லை . "திரும்பச் சொல்லு" என்றான். "இதையெல்லாம் ஒரு தடவைதான் சொல்லுவாங்க." என்று சொல்லிவிட்டு சைக்கிளில் ஏறிப் பறந்தாள் ஜெனிஃபர்.

சரவணன்தான் ஜெனிஃபர் பேச்சுக்கு கோனார் நோட்ஸ் சொல்லிக் கொண்டிருந்தான். அப்புறம்தான் முருகேஷுக்கு கொஞ்சம் தெம்பு வந்தது. "ஒரு லவ் லெட்டர் எழுது ப்ரோ." என்றான் சரவணன். எழுதுகிற விஷயம் என்றாலே முருகேஷுக்கு கொஞ்சம் உதறல்தான். "தப்புத் தப்பா எழுதுவேன் ப்ரோ. எனக்கு சின்ன ற பெரிய ர எல்லாமே கொஞ்சம் தகறாருதான்" என்றான் முருகேஷ். "அது பரவாயில்லை ப்ரோ . எல்லாருக்குமே அது தகராறுதான். "அவளுக்குக்கூட தகராறாதான் இருக்கும்" என்று ஒரு வகுப்பளாவிய உண்மையைச் சொன்னான் சரவணன். "அவ நோட்புக்கைப் பார்த்துடலாம்" என்றான். கஷ்டப்பட்டு ஒரு இடைவேளையில் அவள் தமிழ் நோட்புக்கை எடுத்து ரகசியமாகப் பார்த்தார்கள். இவர்கள் அளவுக்கு இல்லாவிட்டாலும் அவளுக்கும் தமிழ்த்தாய் மாற்றாந்தாயாகத்தான் இருந்தாள்.

"அடுத்து சினிமாவுக்குக் கூப்பிடுடா." என்றான் புது கன்சல்டண்ட். பழைய கன்சல்டண்ட் இந்தமாதிரி அதிரடி யோசனைகள் சொல்லமாட்டான். "கூப்பிட்டு அவ வராட்டி?" என்றான் சாய் முருகேஷ். இப்போது அவன் சாய் பக்தனாகிவிட்டதால் பெயர் மாற்றம். ஒரு வியாழக்கிழமைதான் ஜெனிஃபர் அவனைப் பார்த்து சிரித்திருந்தாள். அது சாய் அனுகூலம்தான் என்றான் சரவணன்.

"வரமாட்டேன்னு சொன்னா, பிளேடால கையை அறுத்துக்கடா, ரத்தத்தைப் பார்த்தா பயந்துருவா." என்று இன்னும் அதிரடியாக யோசனை சொன்னான் புது கன்சல்டண்ட். எப்படி உயிருக்கு ஆபத்து இல்லாமல் ரத்தம் மட்டும் வருகிறமாதிரி கையில் எந்த இடத்தில் வைத்துக் கீறவேண்டும் என்று யோசனையும் சொன்னான். "இதோ பார்" என்றான் சரவணன். அவன் கையில் மூன்றுக் கீறல்கள் இருந்தன. "ஏன் ப்ரோ மூணு தடவை கீறணுமா?" என்றான் கலக்கத்துடன் சாய் முருகேஷ். "இல்லையில்ல. ஒருதடவை போதும். இது வேற மேட்டர்" என்றான் சரவணன். (மூன்று கீறல்களும் சைக்கிளில் ஆட்டோ மீது மோதி வாங்கிய சில்லறைகள்.)

திட்டமிட்டபடி பாக்கெட்டில் அரை பிளேடுடன் ஜெனிஃபரை எதிர்கொண்டான் சாய் முருகேஷ். எதிர்பார்த்தபடி அவள், "அதெல்லாம் வரமுடியாது போடா." என்றாள். உடனே சாய்முருகேஷ் அரை பிளேடை எடுத்து கையில் கீறிக் கொண்டான். ஜெனிஃபர் பதறினாள். ஆனாலும் படத்துக்கு வர ஒப்புக் கொள்ளவில்லை. அவளுக்கு அந்த ஹீரோவைப் பிடிக்காது என்பதுதான் நிஜ காரணம் என்று சரவணன் நோட்ஸ் வாசித்தான்.

அப்புறம் ஒரு ஏழெட்டு முறை சின்னச் சின்னதாக ஜெனிஃபருக்கு பரிசுகள் கொடுத்தான் சாய் முருகேஷ். எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டாள் ஜெனிஃபர். தன் 'காதல்' கான்கிரீட் ஊற்றி கெட்டியாகிவிட்டதாக சாய் முருகேவுக்கு ஏக மகிழ்ச்சி..

பள்ளிக்காலம் முடியும் வேளை வந்துவிட்டது. அடுத்தது என்ன என்று தெரியவில்லை. ஜெனிஃபர் நன்றாகப் படிப்பாள். நிச்சயம் மெடிகல் இல்லாவிட்டாலும் வேறு நல்ல படிப்புக்குப் போய்விடுவாள். சாய் முருகேஷ் பெயிலாக மாட்டான். தப்பித்துவிடுவான். ஆனால் ஏதாவது ஆர்ட்ஸ் காலேஜில் தமிழ் இலக்கியம் சீட்தான் கிடைக்கும்.

கல்லூரிக்குப் போவதற்கு முன்னால் கல்யாணம் செய்துவிடுவது நல்லது என்றான் சரவணன். "நீ ஏன் ப்ரோ இன்னும் செய்யல?" என்று முதல்முறையாக புத்திசாலித்தனமாக ஒரு கேள்வி கேட்டான் சாய் முருகேஷ். “யாரை செய்யறதுன்னு யோசிச்சுகிட்டிருக்கேன். " என்று சரவணன் சொன்னதை உண்மையாகவே நம்பினான் சாய் முருகேஷ். சரவணனிடம் நிறைய பெண்கள் கலகலப்பாகப் பழகுவார்கள். (அதற்கான அசல் காரணம் முருகேஷ்க்குத் தெரிந்திருக்கவில்லை .) உணவு இடைவேளையின்போது அவளுக்கு ஒரு தாலி கட்டிவிடலாம் என்று சூப்பர் அதிரடி யோசனையை சரவணன் சொன்னபோது, சாய் முருகேஷுக்கு நிஜமாகவே பயம் வந்தது. கூடவே ஆசையும்தான். ஜெனிஃபர் ஒப்புக் கொள்வாளா? அவள் கிறிஸ்டியன் ஆயிற்றே. தாலி கட்டுவார்களா? கத்தோலிக்கர்கள் கட்டுவார்கள்; பிராட்டெஸ்டெண்ட் கட்டமாட்டார்கள் என்று தன் கிறித்துவ அறிவில் விளக்கினான் சரவணன். ஜெனிஃபர் இரண்டும் இல்லை. பெந்தெகோஸ்ட் என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை . கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். எந்தப் பிரிவாயிருந்தாலும் வெட்டிங் ரிங் போடுவார்கள். எனவே தாலிக்கு பதில் மோதிரம் போட்டுவிடலாம். அப்படிப் போட்டுவிட்டால் விரலையே வெட்டினாலும் முருகேஷ்தான் என் கணவர் என்று எந்தக் கர்த்தர் முன்னாலும் சத்தியம் செய்ய ஜெனிஃபர் தயங்கமாட்டாள் என்று சரவணன் அடித்துச் சொன்னான்.

மோதிரத்துக்கு காசு தேற்ற முருகேஷுக்கு மூன்று மாதம் ஆயிற்று. வீட்டிலிருந்து எப்படித் தேற்றலாம் என்பதற்கும் சரவணன்தான் கன்சல்டண்ட். கடைசியாக அந்த சுப யோக சுப முகூர்த்த உச்சி வேளையில்சாய் முருகேஷ் சாப்பிட்டுவிட்டு , உட்கார்ந்திருந்த ஜெனிஃபரிடம் போய் “கையை நீட்டு” என்றான். “என்ன?” என்றாள் எப்போதும் ஜெனிஃபரின் இலவச இணைப்பாக கூடவே திரியும் யாழினி. உடனே முருகேஷ் "லாஸ்ட் டே. சாக்லெட்." என்றபடி அவள் கையில் ஒரு சாக்லெட்டைத் திணித்தான். அடுத்து ஜெனிஃபரும் கையை நீட்டினாள். இடது கையால் அவள் மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு வலது கையால் சட்டென்று அவள் விரலில் மோதிரத்தை நுழைத்தான். ஜெனிஃபர் அதிர்ந்து போய் எழுந்தாள். “கவலைப்படாதே.

இனிமே யார் கேட்டாலும் கல்யாணம் ஆயிருச்சுன்னு சொல்லிரு" என்றான் உடன்பிறவா கன்சல்டண்ட் சரவணன். ஜெனிஃபர் முகத்தில் பயத்தோடு மகிழ்ச்சியும் இருப்பதாக அவன்தான் அப்புறம் முருகேஷுக்கு விளக்கினான். !

எட்டு வருடம் கழித்து ஜெனிஃபர் வீட்டில் திருமணப் பேச்சை எடுக்கும்போது, அவள் விரலிலிருந்து கழற்றி ஒளித்து வைத்திருந்த மோதிரத்தைப் பெற்றோருக்குக் காட்டி தனக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது என்று சொல்வாள்; உடனே முருகேஷ் வீட்டுக்கு வந்து பெண் கேட்பார்கள். முருகேஷ் மார்ட்டின் லூதர் கிங் என்று பெயரை மாற்றிக் கொள்ள ஒப்புக் கொண்டுவிட்டால் உடனே இன்னொரு முறை கல்யாணம் செய்து வைத்துவிடுவார்கள்....... என்றெல்லாம் சரவணன் சொன்னது எதுவும் நடக்கவில்லை .

*****

ஜெனிஃபருக்கு பத்து நொடி முன்னால் முருகேசன் (இன்னும் முருகேஷ் ஆகவில்லை அப்போது) எழுந்து வழியை அடைத்துக் கொண்டபோது அவள் அவனிடம், "உன் பெயர் என்ன என்று கேட்டது நிஜம்.

"முருகேஷ் " என்று பெருமையாக இவன் சொன்னதும் நிஜம். அதன்பின் அவள் "இல்லை . உன் பேர் இடியட். இப்படி யாரையாவது இடிக்கலாம்னு திரியறவன் எல்லார் பெயரும் இடியட்" என்று திட்டிவிட்டுப் போனது முருகேசனின் செலக்டிவ் அம்னீஷியாவில் காணாமல் போய்விட்டது.

சைக்கிளை மடக்கி. "லவ் யூ சொல்லு" என்று முருகேஷ் சொன்னபோது, ஜெனிஃபர் கீழே கிடந்த தன் சைக்கிளைப் பொருட்படுத்தாமல், யாழினி சைக்கிளின் பின் சீட்டில் உட்கார்ந்துகொண்டு "ஸ்டேஷனுக்கு விடுடி" என்றாள். தன் சைக்கிளை முருகேசன் என்ற பையன் திருடிக் கொண்டு போயிருப்பதாக கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடுத்தாள். போலீஸ் ஸ்கூலுக்கு வந்தபோது முருகேசன் தன் சைக்கிளுடன் இன்னொரு சைக்கிளையும் சைடில் பிடித்துக் கொண்டு ஓட்டி வந்ததாக சாட்சி சொல்ல அறுபது பேர் இருந்தார்கள். திருடுபோன சைக்கிள் கிடைத்துவிட்டதால் பையனை 'வார்னிங்' குடன் விட்டு விடுவதாக ஏட்டு சொன்னதை ஜெனிஃபர் ஏற்றுக் கொண்டபோது பையனுக்கு போன உயிர் திரும்ப வந்தது.

முருகேசன் தன் பெயரை முருகேஷ், சாய் முருகேஷ் என்றெல்லாம் மாற்றி வைத்துக் கொண்டபோதிலும், ஜெனிஃபர் அவனுக்கு வைத்திருந்த பெயர் 'லூசு' என்பது மட்டும்தான். அவன் அருகில் வரும்போதே யாழினியிடம் சொல்வாள்; "இப்ப என்னை சினிமாவுக்கு வான்னு கூப்பிடப் போறான் பார் லூசு."

ஒவ்வொரு முறை அவன் அவளுக்கு ஏதாவது பரிசு கொடுத்தபோதும், அதெல்லாம் பள்ளிக்கூட வாசலில் இருக்கும் பெரிய குப்பைத் தொட்டிக்குத்தான் போகும் என்பது சாய் முருகேஷுக்குத் தெரியாது. அவனுடைய கன்சல்டண்ட்டுகளுக்கும் தெரியாது.

கடைசியாக முருகேஷ் ஜெனிஃபருக்கு மோதிரம் போட்டதும் நடந்ததே வேறு. அவளுக்கு முதலில் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. ஒரு நொடிதான். வேகமாக வகுப்பறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த முருகேசனை “ஏய் முருகேஷ். இங்க வா, நான் உன்னோட பேசணும்” என்று அழைத்தாள். குழப்பமான மனநிலையில் இருந்த முருகேஷ் ஆட்டுக் குட்டி போல வந்து அவள் எதிரே உட்கார்ந்தான். ஜெனிஃபர் ஒரு பத்து நிமிடம் பேசினாள். எதிர்ப் பேச்சே இல்லாமல் முருகேஷ் கேட்டுக் கொண்டிருந்தான்.

“டேய். உனக்கும் எனக்கும் இது காதலிக்கற வயசும் இல்ல. கல்யாணம் பண்ற வயசும் இல்ல. படிக்கற வயசு. வெறும் 15. இருபத்தஞ்சு வயசுல யோசிக்க வேண்டியதையெல்லாம் இப்ப யோசிச்சா எல்லாம் தப்புத் தப்பா போகும். சரியா பத்து வருஷம் கழிச்சு ரெண்டு பேரும் எங்க இருந்தாலும் மீட் பண்ணுவோம். அன்னிக்கு நீ என்னை லவ் பண்றியா, நான் உன்னை லவ் பண்ணலாமான்னு முடிவு பண்ணலாம். அது வரைக்கும் ஒழுங்கா படிச்சு நல்ல வேலைக்கு போற வழியைப் பார்ப்போம். நீ பாஸ் பண்ணி நல்ல வேலைக்குப் போனா என்னை மீட் பண்ணு. இல்லாட்டி பார்க்காதே, உன் மோதிரத்தை நான் பத்திரமா வெச்சிருக்கேன். பத்து வருஷம் கழிச்சு மீட் பண்றப்ப திருப்பித் தரேன். " என்பதுதான் ஜெனிஃபர் பேச்சின் சாரம். ப அவள் மோதிரத்தை வீசி எறியவில்லை என்பது முருகேஷுக்கு பெரிய நம்பிக்கையின் அடையாளம் என்று சரவணன் விளக்கம் கொடுத்தான். "தூக்கி எறிஞ்சிருந்தா அந்த லூசு உடனே போய் தற்கொலை செய்துடப் போகுதேன்னுதான் தூக்கி எறியலை" என்று யாழினியிடம் விளக்கியிருந்தாள் ஜெனிஃபர்.

அடுத்த ஏழெட்டு வருடம் முருகேஷ் ஜெனிஃபர் பற்றிய கனவுகளுடன் கொஞ்சம் ஒழுங்காகப் படித்தான். தமிழ் இலக்கியம் படிக்காமல் பி.காம். படித்தான். தாமோதர் திலீப்குமார் எக்ஸ்போர்ட் இம்போர்ட் கம்பெனியில் அக்கவுண்டண்ட் ஆனான். ஜெனிஃபரைப் பிரிந்து ஒன்பது வருடமானபோது அவனுக்கும் முத்துலட்சுமிக்கும் கல்யாணம் ஆயிற்று.

*****

“ஏன் 'டிவி'யைப் போட்டுவிட்டுட்டு அதைப் பார்க்காம மோட்டு வளையைப் பாத்துக்கிட்டிருக்கீங்க?" என்றார் முத்துலட்சுமி. வயது 50.

"பிக் பாஸ் முடிஞ்சு போச்சு. ஏதோ யோசிச்சுகிட்டிருந்தேன். இன்னிக்கு நிகழ்ச்சியில புதுசா ஒரு பொண்ணு சேத்திருக்காங்க. மாடலிங் பொண்ணாம். ஜெனிஃபர்னு பேரு. என்றார் முருகேசன். வயது 55, - "ஓ, ஜெனிஃபர்னதும் பழைய ஞாபகம்லாம் வந்துருச்சா?" என்றார் முத்துலட்சுமி. பழைய ஞாபகமா? இவளுக்கு அதெல்லாம் எப்படித் தெரியும் ? அதிர்ச்சியாக இருந்தது முருகேசனுக்கு.

“என்ன பழைய ஞாபகம், என்ன சொல்றே?” என்றார்.

“அட, எனக்கு எல்லாம் தெரியும்ங்க. உங்க கிளாஸ்மேட் உதய், என் பெரியப்பா பையன் தானே. எல்லா கதையும் சொல்லியிருக்கான்."

எல்லாம் தெரிந்துதான் என்னோடு இத்தனை காலமாக இருக்கிறாயா?

முருகேசன் நிமிர்ந்து முத்துலட்சுமியைப் பார்த்தார். அவர் பார்வையில் காதல் ஒளிர்ந்தது.